உ

சிவமயம்.

# ஞானசிவவாதக் கட்டளை.

சேஷாத்திரிசிவதேசிகர்
அருளிச்செய்தது

———()———

இஃது
சிதம்பரம்
குருநாதசுவாமிகளால்
பார்வையிடப்பட்டு.

———

கும்பகோணம் புத்தகவியாபாரம்
கோ - சீனிவாசப்பிள்ளையவர்களால்
நுங்கம்பாக்கம்.
அருணகிரிமுதலியார்
அவர்களது
அம்பாள்விலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது

௧௮௬௯

உ

சிவமயம்

# நாஞசிவவாதக்கட்டளை

———(⌘)———

சுத்தப்பிரமமாகிய சர்வசாட்சியி னிடத்திலே அக்கினியிற்சூடுபோல அவின்னமாக விருக்கின்ற ஒருசத்தியுண்டு-இந்தச்சத்தி அவ்வதிதப் பிரமத்தினிடத்தில்அடங்கியிருக்கும்போ ததற்குசுத்த பிரம மென்று பெயர் இந்தச்சத்தி விரிசிம்பித்துச் சுத்தப்ர மத்தை வியாபிக்கும்போது அப்பிரமம் பரைவியா பகத்துக் குள்ளிருந்த படியினாலே யதற்குப் பரப்பிரம மென்றுபெயர்.

புருஷன் சன்னிதானத்திலே ஸ்திரீக்குஇனபஞ்சனித்தாற்போலப் பிரம சன்னி தானத்தில் லட்சணகுணியமாக விருக்கின்ற அந்தச்சத்தியி னிடத்திலே அவ்கிர்தசத்துவ ரஜஸ்தமோ குணங்களுண்டாயின அந்தச்சுத்த சத்துவத்துக்கு ஆனந்தரூப சத்தி யென்று பெயர் சுத்த ரஜசுக்குச்சித்ரூப சத்தியென்றுபெயர்—சுத்ததமசுக்குச்சத்ரூபசத்தி யென்றுபெயர் அப்பரப்பிரமம்காரணமான ஆனந்த ரூபசத்தியுடனே கூடிச்சர்வானந்த சுழித்தியை யடையும்போது அதற்குப்பிரமானந்தனெ

ன்றபெயராம் அந்தப்பரமானந்தன் சித்ரூபசத்தி யுட- னேகூடி சர்வப்பிரகாச மென்னும் கெர்ப்பனுவஸ் தை யையடையும போது அவர்க்குப்பரமானந்தனென்னும் பெயர் போய்ப் பரிபூரண னென்னும் பெயராம- அந்த ப் பரிபூரணன் சத்ரூப சத்தியுடனே கூடிச் சர்வவியா பக மென்னுஞ் சாக்கிராவஸ்தையை யடையும் போது அவர்க்குப் பரிபூரண னென்னும் பெயர் போய்ப் பர னெனும் பெயராம்

இந்த அகண்டபரி பூரணசச்சிதானந்த பிரமத்தினி டத்திலே சுத்தியில்இரதசந் தோன்றினாற் போல மூல ப்பிரகிருதி யென்னு மொருசத்தி யுண்டாயிற்று- அந் தமூலப் பிரகிருதி விகிர்தசத்துவ ரஜசுதமசு என்னும் முக்குணங்களுடனே கூடியிருக்கும் அந்தப் பிரகிருதி யின் சத்துவ குணத்திற்கு மாயையென்றுஞ் சர்வஜ வுபாதியென்றும் ஈஸ்வரன்காரண சரீரமென்றும்பெ ர்- அந்தமாயையி னிடத்திலே நிர்மல சலப் பிரதி பி பம்போலப் பிரபஞ்ச லட்சணமாகப் பிரதிபிம் பிக்கு அந்தச் சைதன்னிய பிரதி பிம்பத்துக்குச் சர்வஜ கிய ஈஸ்வரனென்று பெயர்

அந்தச் சத்துவகுண மாயையி னிடத்திலே சத்துவ த்திற் சத்துவம்- சத்துவத்தில்- ரஜசு- சத்து வத்தில்த மசுஎன்னு மூன்றுகுணங்களுண்டு சத்துவத்திற்சத்து

வம் பிரதான மாகும்போது அதிற்பிரதி பிம்பித்த ஈசு
வரனுக்குச் சகத்தை ரட்சிக்கையி னாலே விஷ்ணு வெ
ன்று பெயராம்- சத்துவத்தில் ரஜசுபிரதானமாகும்போ
து அதிற்பிரதி பிம்பித்த யீஸ்வரனுக்குச் சகத்தைச்சி
ருஷ்டிக்கையினாலே பிரமனென்று பெயராம - சத்துவ
த்தில் தமசுபிரதான மாகும்போது அதிற்பிரதி பிம்பி
த்த யீசுவரனுக்குச் சகத்தைச் சங்காரம பண்ணுகையி
ல்ருத்திர னென்று பெயராம்- இவையே மூலப்பிரகிரு
தி யின்சத்துவகுண கற்பனையாம.

மூலப்பிரகிருதியின் ரசோகுணம் அனேகரூபமாய்ஒ
ன்றற்கொன்று தாரதம்யமுள்ள வைகளா யிருக்கும்அ
வைகளுக்கு அவித்தைக ளென்றுஞ் சீவகாரண சரீர
ங்க ளென்றும் பெயர்- அந்த அவித்தைகளிடத்தில் ம
லினசலப்பிரதி பிம்பம்போலப் பிரமசைதனனியம் பிர
பிம்பிக்கும்- அந்தச்சைதன்னிய பிரதி பிம்பங்களுக்
க்கிஞ்சி ஜஞரென்றுஞ் சிதாபாசசீவ ரென்றும்பெய
இந்த அவித்தைக ளிடத்தில் ரஜசிற்- சத்துவம்- ரஜ
ல்- ரஜசு- ரஜசில்- தமசு- என்னு மூன்று குணங்களு
ண்டு- ரஜசிற்சத்துவம்- பிரதான மாகும்போது அதிற்
பிரதிபிம பித்தசிதா பாசாதத்துவஞான நிஷ்டகராவர்
ரஜசில்- ரஜசுபிரதான மாகும்போது அதிற்பிரதிபிம்பி
த்த சிதாபாசர் காமக்குரோதபர ராய்க்கர்ம நிஷ்டராவ
ர்- ரஜசில்- தமசு பிரதான மாகும்போது அதிற் பிரதி
பிம்பித்த சிதாபாசர் சோம்பல் நித்திரைமயக்கங்களை யு

டையராவர்- இவையே மூலப் பிரகிருதி யின்ரசோ கு ணகற்பனையாம

மூலப்பிர கிருதியின் தமோகுணத்தில் ஆவரணம் விட்சேப மென்னும் இரண்டுசத்திக ளுண்டு அவ்விரண்டில் ஆவரண சத்தி யான தத்துவ ஞானி களும் ஈசுவரனுந்தவிர மற்றச் சீவர்களுக்குச் சரீரத்திரயம் பிதாபாசன்- சாட்சி சைதன்னியம் என்பவை களில் ஒன்றற்கொன்று பேதந்தெரிய வொட்டாமல் மறைத்துநிற்கும் அதனால்மறைக்கப் பட்டிருப்பவன் இருபத் தொன்பது தத்துவங் களையும் நானென்று அபிமானிப் பன் அந்தஅபிமானத்திற்கு அகங்காரக் கிரந்தியென்றுஞ் சம்சாரபந்த மென்றும் பெயர்- சற்குருகடாட்சத்தினால் அந்த ஆவரணநீக்கி இருபத் தொன்பது தத்துவங்களையுந் தானனறென்று அறிகிறதே முத்தி இவையே ஆவரணசத்தியின்காரியமாம்

விட்சேபத்தி னிடத்திற் சப்த்தன் மாத்திரை யான ஆகாசந் தோன்றிற்று ஆகாசத்திற் பரிசதன்மாத்திரை யானவையுந் தோன்றிற்று வாயுவில் ரூபதன் மாத்திரையான அக்கினி தோன்றிற்று அக்கினியில் ராசதன் மாத்திரையான அப்புதோன்றிற்று அப்புவி லகந்தன் மாத்திரையான பிருதுவி தோன்றிற்று அந்தச் சூட்சும பஞ்சபூதத்திற்கு காரணமாக விளக்கின்றவிட்சேப சத்தியி னிடத்திலே தமசில் - சத்துவம் தமசில் ரஜசு தம

சில்- தமசு என்னு முக்குணங்களு மடங்கியிருக்கிறபடி
யினால் அதன் காரியமான அந்தப்பஞ்ச பூதங்களும் அ
ம்முக் குணங்களுடனே தோனறின அந்தப்பஞ்ச பூத
ங்களுக்குத் தன்மாத்திரைக ளென்றும அபஞ்சிகிருத
பூதங்க ளென்றும சூட்சம பூதங்களென்றும் பெயர்

இவைகளிடத்தில் சூட்சுமசரீரங்களும் ஸ்தூலபூதங்
களுந் தோன்றும எங்ஙனமெனின் ஆகாசமுதலான ப
ஞ்சபூதங்களின் சத்துவாம்சத்திலே ஒவ்வொரு பூதத்
தி னொவ்வொரு மாத்திரைகள் ஒன்றாகச் சேர்ந்து அந்
தக்கரண முண்டாயிற்று அந்த அந்தக் கரணத்தில் ஆகா
சத்தினம சங்கூடிய தற்கடையாளம அந்த அந்தக்கரண
மும் ஆகாசத்தைப்போலச் சகலசத்தத்திற்கு மிடங்கொ
டுத் தத்தரிக்கின்ற தேயாம் அப்படித் தரிக்கின்ற விரு
த்திக்கு உள்ளமென்று பெயர்- அந்த அந்தக் கரணத்தி
ல் வாயுவினம் சங்கூடிய தற்கடையாளம்- அந்த அந்த
க்கரணமும் வாயுவைப்போல அலைகின்ற தேயாம் அப்
படியலைகின்ற விருத்திக்கு மனமென்று பெயர்- அந்த
அந்தக் கரணத்தில் அக்கினியினம் சங்கூடிய தற்கடை
யாளம்- அந்த அந்தக்காரணம் அக்கினியைப்போல இ
தாவிதுவென்று விளக்குவிக்கின்றதேயாம் அப்படிவி
ளக்குவிக்கின்ற விருத்திக்குப் புத்திவென்று பெயர் அ
ந்த அந்தகரணத்தில் அப்புவினம் சங்கூடிய தற்கடை
யாளம் அந்த அந்தக்கரணம் அப்புவைப்போல விஷய

ங்களைப் பற்றச் சொல்லுகின்ற தேயாம்- அப்படிச் செ
ல்லுகின்ற விருத்திக்குச் சித்தமென்று பெயர் அந்தஅ
ந்தக் கரணத்திற் பிருதுவியினம் கூங்கூடியதற்கடையா
ளம் அந்தஅந்தக் கரணம் பிருதுவியைப்போலக் கடின
மாகநின்று நானென்று அபிமானிக் கின்றதேயாம் அந்
தவிருத்திக்கு அகங்கார மென்று பெயர்- அப்பஞ்ச பூ
தங்களினுடைய சத்துவாம் சத்திலே ஒவ்வொரு பூதத்
தின் ஒவ்வொரு மாத்திரைகள் தனித்தனியே சுரோத்
திஞானேந்திரியங்களாயின சுரோ'த்திரம் ஆகாசத்
தினம்சமானபடியினாலே ஆகாசத்தின் குணமான சப்
தத்தை மாத்திரம் அறியும் துவக்குவாயுவி னம்சமான
படியினாலே வாயுவின் குணமான பரிசத்தை மாத்திர
ம் அறியும சட்சு அக்கினியின் குணமானரூபத்தைமா
த்திரம் அறியும்சிகுவை அப்புவி னம்சமான படியினா
லே அப்புவின் குணமாரஸ்தை மாத்திரம் அறியும
கிராணம் பிருதுவியி னம்சமானபடியினாலேபிருதுவியி
ன் குணமான கந்தத்தை மாத்திரம் அறியும் இப்படியி
வைகள் ஒன்றுடனொன்று கூடாமல் தனித்தனியாயுண்
டாயிருக்கிற படியினாலே ஒன்றுமற்றொன்றின் குண
த்தை அறிய மாட்டாது அவ்வைந்து பூதங் களின் ஐ
ந்து மாத்திரை சளும் ஒன்றாகக்கூடியது அந்த கரண
மாதலால் ஐந்திந்திரியங் களிலுஞ் சேர்ந்து ஐந்துவிஷ
யங்களையு மறியும் அந்தச்சத்துவ குணத்தி லுண்டான
ந் அதகரண மைந்து ஞானேந்திரிய மைந்தும் ஆகியபத்

தஞ்சத்துவாம்சமானபடியினாலே ஞானசாதனமாயின

இவ்வைந்து பூதங்களினுடைய ராஜோம்சத்திலே ஒவ்வொரு பூதத்தின் ஒவ்வொரு மாத்திரைகளொன்றாகச் சேர்ந்து வியானாதிபஞ்சவாயுக்களுண்டாயின இவையில் வியானவாயு ஆகாசத்தினம்சமானபடியினாலே ஆகாசத்தைப் போலச் சர்வாங்கமும் வியாபித் திருக்கும் பிராணவாயு வாயவினம்சமான படியினாலே வாயுவைப் போல் இருதயத்தி லிருந்து நாசிவரை யிலுமலையும் அபானவாயு அக்கினியி னம்சமான படியினாலே அக்கினியைப் போலச் சாடராக் கினியாய் உஷ்ணத்தைச் செய்து குதத்தைப்பற்றி நின்று அன்னபானாதிகளைச் சீரணிப்பிக்கும் சமானவாயு அப்புவி னம்சமானபடியினாலே சரீரநடுவான நாபிஸ் தானத்தி னின்று அன்னபானாதிகளைச் சகலநாடிகளிலும் அப்புவைப்போல இழுத்துக் கொண்டு செல்லும் உதானவாயு பிருதுவியி னம்சமானபடியினாலே கண்டஸ் தானத்தி னின்று பிருதுவியைப்போலே வுரத்துத் தரிக்கும் இந்தப்பஞ்ச வாயுக்களுமல்லாமல் வாயிலிருந்து வாந்தி பண்ணிவிக்கின்றது நாகனென்றும் நேத்திரத்தி லிருந்துவிழிப்பிக்கின்றது கூர்மனென்றும் மூக்கிலிருந்து குரு குருத்துத் தும்மச் செய்கின்றது கிரிகா னென்றும் கொட்டாவி கொள்ளச் செய்கின்றது தேவதத்த னென்றும் வீங்கச்செய்கின்றது தனஞ்சயனென்றுஞ் சொல்லப்பட்ட ஐந்து வாயுக்களுண் டென்றுஞ் சிலர் சொல்வார்கள் இவை

யைந்தும் பிராணவாயுவி னுடைய தொழிலா யிருக்கின்றமையால் வேறல்லவென்று அறிக

ஆகாச முதலான பஞ்சபூதங்களி னுடைய ரசோம் சத்திலே ஒவ்வொரு பூதத்தி னொவ்வொருமாத்திரைகள் தனித்தனியே வர்க்காதி கன்மேந் திரியங்க ளாயின- இவைகளில் ஆகாசத்தி னிடமாக வாக்கு வசனிக்கும் வாயுவினிட மாகப் பாணியிடுதலு மேற்றலுஞ் செய்யும் அக்கினியி னிடமாகப் பாதநடக்கும் அப்புவியினிடமாகப்பாயு மலசாதிகளை வெளியிலே தள்ளும பிருதுவியி னிடமாக உபஸ்தம் ஆனந்திப் பிக்கும் இவையைந்தும் தனித் தனியா யுண்டா யிருக்கிற படியால் ஒன்று மற்றொன்றின் தொழிலைச் செய்ய மாட்டாது வியானாதி வாயுக்களைந்தும் அப்பூதங்களின் மாத்திரைகளொன்றாகக்கூடி யுண்டா யிருக்கின்றமையால் கர்ம்மேந்திரியம் ஐந்தினிட மாகவுஞ் சென்று அவற்றின் ஐந்து தொழில்களையுஞ் செய்விக்கும் இவ்வாயுக் களைந்துகர்ம்மேந்திரியங் களைந்தும் ஆகிய பத்தும் ராஜோம்சமான படியினாலே கிரியாசாதன மாயின இந்த இருபதுதத்துவமும் சூட்சம சரீரமென்று சொல்லப் படும் இந்த சூட்சம சரீரத்தைமாயாப்பிரதி பிம்பனாகிய ஈஸ்வரன் அவித்தையா பிரதி பிம்ப ராகிய சீவர்களனேக ராகையால் ஒவ்வொரு வருக்கு ஒவ்வொரு சரீரமாகச் சிருஷ்டித்து அளித்தார் இப்படி பஞ்சபூதத்தினுடைய சத்துவா

ம்சமும் ரஜோம்சமுங் கழிந்தனதமோம்ச நிற்கின்றது
இதுவே சூட்சம சரீரகற்பனையாம்

இப்படிச் சேவித்து நின்ற தமோம்சமான சூட்சமபஞ்சபூதத்தி னிடத்தில் ஸ்தூல பூதங்களும ஸ்தூலலதேசங்களும் தோன்றும் எப்படி யென்றால் தமோம்சமா யிருக்கிற இந்தஐந்து பூதங்களும் ஒவ்வொன்று இரண்டி ரண்டாகி முதற்பாதி யைந்தும் ஒவ்வொன்று நன்நான்காகி இரண்டாம் பாதியைந்தில் தன்னமிசம் விட்டு மற்றநான்கு பூதத்தினுடனும அரைக்கால் அரைக்கால் மாத்திரையாகச் சேர்ந்து பஞ்சீகரணமாயின இப்படி பஞ்சீகாரணமான ஸ்தூலபூதங்களுள் ஆகாசத்திலே பரிசரூப ரசகந்தமாகிய நான்கு குணமுமம வியாப்பியமான படியினாலே அதிருசியமாய நிற்க நிசகுணமாகிய சப்தந்திருசியமாய்த் தோன்றி நிற்கும் வாயுவிலே ரூபரசக் கந்தமாகிய மூன்று குணமும வியாப்பியமானபடியினாலே அதிசிருயமாய் னிற்கக் காரண குணமாகிய சப்தமு நிசகுணமாகிய பரிசமுந் திருசியமாகத் தோன்றி நிற்கும் அக்கினியிலே ரசகந்த மாகிய இரண்டுகுணமும் வியாப்பியமான படியினாலே அதிருசியமாய் நிற்கக் காரணகுணங்க ளாகிய சத்தபரிசமு நிசகுணமாகிய ரூபமுந் திருசியமாகத்தோன்றிநிற்கும் அப்புவிலேகந்தகுணம் வியாப்பியமான படியினாலே அதிருசியமாய் நிற்ககாரீண குணங்களாகியசப்தபரிச ரூபமுந்நிசகுணமாகிய ரசமுந் திருசியமாய்த்தோன்றி நிற்கும்பி

ருதுவியிலே காரண குணங்களாகிய சப்த பரிச ரூபரச
மும் நிசகுண மாகிய கந்த முந்திருசியமாகத் தோன்றி
நிற்கும் சூட்சம பூதத்திலிருந்துசூட்சமசரீந் தோன்றி
னது போலப் பஞ்சீகரித்த ஸ்தூல பூதத்தினின்றும் ஆ
றுத்ததுவமாய் நால்வகைத் தோற்றமாய் மூவகைச் சா
தியாய் ஸ்தூல சரீரங்கள் தோன்றின

ஆறுதத்துவங்க ளாவன கர்மம் உதிரம்- மாம்சம்
நரம்பு- அஸ்தி- மச்சை- இவைகளாம்- நால்வகைத்தோ
ற்றங்களாவன- சராயுஜம்- அண்டஜம்- சுவேதஜம் உற்
பீஜம்- இவைசளாம்- மூவகைச் சாதிகளான - இகலோக
புத்தி- பரலோகபுத்தி யென்னு மிரண்டையு முடைய
மனிதர்கள் - உத்தமஜாதி- பரலோக புத்தி யின்றி இக
லோகபுத்தி மாத்திர முடைய பசுபட்சி முதலான திரி
யக்குகள் மத்திமசாதி இவ்விருவகைப் புத்தியும்இல்லா
தவைகளா யிருக்கின்ற விருட் சாதிகள் அதமசாதி இ
வைகளாம் பிருதுவி தத்துவமா யிருக்கிற பூலோ கத்தி
லே இந்த மூன்று சாதியு மிருக்கின்றன போல - அப்
பு- அக்கினி - வாயு - ஆகாச மென்னப் பட்ட தத்துவ
ங்களா யிருக்கின்ற பிதிர் லோகந் தேவலோகம் கந்தர்வ
லோகஞ் சித்த லோகங்களிலேயு முண்டா யிருக்கின்ற
ன - அங்கே சந்திரன் முதலான பிதிர்கள் சூரியன் மு
தலான தேவர்கள் கந்தர்வர் சித்தர் முதலானவர்கள் உ

த்தமசாதி காமதேனும்- ஐராவதம்-கருடன் முதலான
வைகள் மத்திமசாதி கற்பக விருட்சம் முதலா இவைக
ள் மத்திமசாதி

அன்னமயம்- பிராணமயம்- மனோமயம்- விஞ்ஞா
னமயம்- ஆனந்தமயம்-என்னுமைந்துகோசங்களில்இந்
தஸ் தூலசரீரம் அன்னமயகோசமாம்-சூட்சம- சரீரம்
பிராணமயகோசம் - மனோமய - கோசம விஞ்ஞாமய-
கோசமென்று மூன்று கோசங்களாம் அவையாவன பி
ராணவாயுவுங் கர்மேந்திரியமுங் கூடியது பிராண மய
கோசம் மனதுங் கர்மேந்திரியமுங் கூடியது மனோமய
கோசம் புத்தியும் ஞானேந்திரியமுங்கூடியது விஞ்ஞா
னமயகோசம்- காரணசரீரமானந்த மயகோசமாம் ஆம
தத்துவமா யிருக்கின்ற ஸ்தூல சரீரத்திலே சூட்சமசரீ
ரத்துவ மிருக்கின்ற தெப்படி யென்றால் கர்மேந்திரிய
த்தில் வாக்கும் ஞானேந்திரி யத்தில் சிகுவையும் வாயி
லிருக்கும் உதானவாயுவு மனதுங் கண்டதிலே யிருக்கு
ம்- பிராணவாயுவும் புத்தியும் இருதயத்தி லிருக்கும் ச
மானவாவுஞ் சித்தமும நாபியி லிருக்கும் அபானவாயு
ம் பாயவுங் குதத்தி லிருக்கும் - வியானு வாயுவும் ஞா
னேந்திரி யத்திலே துவக்கும் அகங்காரமுஞ் சர்வாங்க
மமுவியா பித்திருக்கும் உச்சியிலே உள்ளமும் கரு
விழி நுனியிலே சட்சு இந்திரியமும் சாதிக் குள்ளே சு
ரோத்திரேந்திரியமும் - மூக்கு நுனியில் கிராணேந்தி
ரியமும் ஆகிய இவைகள் கண்டத்திற்கு மேலே- தனி

த்தனியே யிருக்கும்- கண்டத்திற்குக் கீழே கைகால் குய்யங்களில் பாணிபாதம் உபஸ்தமென்னு மிந்திரியங்கள் தனித்தனியே யிருக்கும் இப்படி ஸ்தூல சரீரதத்துவம் ஆறும் அதிற் குடிபுகுந்த சூட்சம சரீரதத்துவ மிருபதும்- ஆகியதத்துவ மிருபத்தாறும் பஞ்சபூதத்தின் காரியமான படியினாலே இவைகளினாலாகிய ஸ்தூலசூட்சமசரீரங்கள்காரியசரீரமென்று சொல்லப்படும

அவித்தையிற் பிரதிபிம்பத்த சிதாபாசன் சாக்கிரத்திலே இந்த இருபத்தாறு தத்துவத் துடனே கலந்து நின்றபோது விஸ்வ னென்றும் வியவகாரி சீவனென்றுஞ் சொல்லப்படும்- ஸ்தூல சரீரத்தை விட்டுச் சொப்பனத்திலே யந்தக்கரணத் துடனே கூடிநின்ற போது தைசதனென்றும் பிராதி பாசிகசீவ னென்று சொப்பனகற்பித னென்றும் சொல்லைப்படும் சுழுத்தியிலே காரிய சரீரதத்துவங்க ளிருபத்தாறையும்விட்டுக்காரண சரீரத்தை மாத்திரம் பொருந்தி யிருக்கும் போதுபிராஞஞ னென்றும் பாரமார்த்திக சீவனென்றும் சொல்லப்படும் பிரமதச தன்னியம் சாக்கிரத்துக்குச் காட்சியா யிருக்கும்போது சீவாத்மா-வென்றுஞ் சொப்பனத்துச் சாட்சியா யிருக்கும்போது அநதராத்மா வென்றுஞ் சுழுத்திக்குச் சாட்சியா யிருக்கும்போது பரமாத்மா வென்றும் அவஸ்தாத்திரய சாட்சியா யிருக்கும்போதுஞான

த்மா வென்றுங் கூடஸ்தனென்றுஞ் சொல்லப்படும் சீவனுக்கு மூன்றவஸ்தையும்- மூன்று சரீரமுஞ்சொல்லப்பட்டன

கற்பிதா பிரபஞ்ச வடிவமாகத் தோன்றுகின்றஸ்தூலபஞ்ச பூதங்களும் அந்த பூதங்களிலே தோன்றின மூன்று சாதியாயிருக்கின்ற ஸ்தூல சரீரசமஷ்டியும் ஈஸ்வரன் ஸ்தூல சரீரமென்றும் விராட்டன்றுஞ் சொல்லப்படும் இவற்றுடனே கூடிச்சாக்கிர அவஸ்தையைப் பொருந்துகின்ற ஈஸ்வரன் வைஸ்வாநரனென்றும் இவற்றிற்கு அதிஷ்டான சைதன்னியம்பிரமனென்றுஞ் சொல்லப் படும் - சூட்சம பூதங்களைந்தும் அப்பூதங்களிலே தோன்றின சூட்சம சரீர சமஷ்டியும் ஈஸ்வரன்- சூட்சம சரீரமென்றும் இரணிய கர்ப்ப மென்றுஞ் சொல்லப் படும்- இவற்றுடனே கூடிச் சொப்பன வஸ்தையைப் பொருந்துகின்ற ஈஸ்வரன் சூத்ராத்மா வென்றும் இவற்றிற்கு அதிஷ்டான சைதன்னியம்- விஷ்ணு வென்றுஞ் சொல்லப்படும்- இந்தஸ்தூலசூட்சமவிஷ்ணு வென்றுஞ்சொல்லப்படும்- இந்தஸ்தூல சூட்சமபிரண்டின் வாசனையுடனே கூடியிருக்கின்ற மாயை- ஈஸ்வரன் காரண சரீரமென்று அவ்வியாகிருத மென்றுஞ் சொல்லப்படும்- இதனுடனே கூடிச் சுழுத்தியவஸ்தையைப் பொருந்துகின்ற ஈஸ்வரன் அந்தரியாமி வெ

ன்றும் இவற்றிற்கு அதிஷ்டான சைதன்னியம் ருத்தி ரனென்றுஞ் சொல்லப் படும்- இவையே யீசுவரனுக்கு மூன்றுசரீரமும் மூன்றவஸ்தையுமாம

சீவன் தன்மூன்றவஸ்தையிலுந் தன்மூன்று சரிர மாயிருக்கின்றஇருபத்தேழுதத்துவத்துடனு நானென்று கலந்து நிற்பது போல ஈசுவரனுந்தன்- மூன்றவஸ்தையிலுந் தன்மூன்று சரிரமா யிருக்கின்ற முப்பத்திரண்டு தத்துவத் துடனுங் கலந்து நிற்பன ஆயினுஞ் சிதாபாச சீவன் தன்சரிர மாத்திரமே கலந்து நிற்பன யீசுவரன் தன்சரிரமாகிய சகலசரிரங்களோடுஞ்சகலபிரபஞ்சங்களோடுங்கலந்து நிற்பன் இவ்விரண்டிற்குஞ் சாட்சியா யிருக்கின்ற பிரமசை தன்னியஞ் சகல பிரபஞ்சத்திலும் நிறைந்து அப்பாலும் அதிக்கிரமித்துஎல்லைபற்றிருக்கும்

சீவனுக்குஸ்தூலசரிர வியவகாரத்திற்குத்தத்துவங்கள் அன்னமயமான சட்கோசத்துவம்-௯-சூட்சமசரிரதத்துவம்-௰௭-சீவன் யீசுவரன் அவித்தை வித்தை பிரமம்-௫-ஆக-௩௧- ஆம்-சூட்சம சரிரவியவ காரத்திற்கு தத்துவங்கள் சூட்சும சரிரதத்துவம்-௭௰- சீவன்யீசுவரன்- அவித்தை வித்தைபிரமம் - ௫-ஆக -௫- ஆம் சீவவியவ காரத்திற்குச் சீவன் ஈஸ்வரன் பிரமம்- ஆக ௩- ஆம்-சாட்சிவியவ காரத்திற்குக் கூடஸ்தர்-௧-ஆம்

வானுக்கு ஸ்தூலசரிர வியவகாரத் திற்குத் தத்துவங் கள் சமஷ்டி அன்னமய கோசதத்துவம-௯- சமஷ்டிசூ ட்சமசரிர தத்துவம்-௨௰- சமஷ்டிசீவன் அவித்தை-௨- ஈஸ்வரன் வித்தைபிரமம்-௩- ஸ்தூலபூதம்-௫-ஆக௩.௬ ஆம்- சூட்சமசரிரவியவகாரத்திற்குத் தத்துவங்கள் சம ஷ்டிசூட்சமசரிரதத்துவம்௨௰-சமஷ்டிசீவன் அவித்தை ௨-சூட்சம் பூதம்-௫-ஈஸ்வரன் வித்தை பிரமம்-௩-ஆக ௩௰-ஆம்காரணசரிர வியவகாரத்திற்குத் தத்துவங்கள் ஈஸ்வரன் வித்தை பிரமம் ஆக-௩-ஆம்- ஈஸ்வர வியவ காரத்திற்கு மீஸ்வரன் பிரமம்-ஆக-௨-ஆம் - பிரமவிய வகாரத்திற்குப் பிரமம் -௧- ஆம் இந்திரிய வியவ காரத் திற்குத் தத்துவங்கள் இந்திரியம்-௧- சட்கோசத்துவம் ௬-அந்தக் கரணம்-௫-வாயு-௫ சீவன்மீஸ்வரன் அவித் தைவித்தை பிரமம்-௫-ஆக-௨௨-ஆம-மனோராச்சிய வி வகாரத்திற்குத் தத்துவங்கள் அந்தக்காரணம்-௫-சீவன் மீஸ்வரன் அவித்தைவித்தை-பிரமம்-௫-ஆக-௰-ஆம்-இ வைகளே - தத்துவங்களி- னுடைய- தோற்றமும நிலை யுமாம

தத்துவங்கள் ஒடுங்குகின்றவழி யெங்ஙன மெனி ன்சகலசீவரிடத்திலு மிருக்கின்ற ஸ்தூலசரிரங்களனை த்தும் அவற்றிற்கு ஆதாரமானஸ் தூலபூதங்களிலே க ரைந்து பூதமாத்திரமாக வொடுங்கி நிற்கும்- அந்த ஸ

தூல பூதங்களும் பஞ்சீகரணத்தை விட்டுத் தன்மாத்
திரைகளான தமோகுண பூதங்களாகச் சேஷித்துநிற்கு
ம் அப்போது அதுகேவல இரணிய கர்ப்பா வஸ்தை
யென்று சொல்லப்படும் சூட்சம சரீரத்துவ மிருபதுங்
கரைந்து அப்பூதங்களி னுடைய சத்துவகுண ரஜோகு
ணங்களிலே யொடுங்கி நிற்கும் எங்ஙனமெனின் சகல
பிராணிக ளிடத்திலு மிருக்கின்ற அகங் காரமுங் கிரா
ணேந் திரியமும் உதானவாயுவும் உபஸ்தேந்திரியமு
ம் பிருதுவியி லொடுங்கும் - சித்தமுஞ் சிகுவையுஞ் ச
மானவாயுவும் பாயுவும் அப்புவி லொடுங்கும்-புத்தியும்
சட்சுவும் அபான வாயுவும் பாதேந்திரியமும் அக்கினி
யி லொடுங்கும் மனதுந் துவக்கும் பிராண வாயுவும் பா
ணிந்திரியமும் வாயுவி லொடுங்கும் உள்ளமுஞ் சுரோ
த்திரமும் வியானவாயுவும் வாக்கும் ஆகாசத்தி லொடு
ங்கும் அப்போது அவைகள் பழைய படியே முக்குண
ங்களையுடைய சூட்சும பூதங்களாகும் இந்த சூட்சம பூ
தங்களுள் பிருதுவி அப்புவிலே கரைந் தொடுங்கும் அ
அப்புவி அக்கினியிலே சுவறி யொடுங்கும் அக்கினி வி
ளக்குப்போல வாயுவிலே அணைந் தொடுங்கும் வாயுவு
ம் ஆகாசத்திலே ஒய்ந்தொடுங்கும் ஆகாசமும் விட்சே
பசத்தியு மூலப்பிர கிருதியின் தமோகுண மாத்திரமா

ய் ஆலமரம் அதன் விரையி லொடுங்கி யிருத்தல் போ
ல மற்றொருசிருஷ்டிக்கு வித்தாகமாயையிலும் அவித்
தையிலு மொடுங்கும் இந்தமாயையும் அவித்தையும் அ
திசூட்சமமான மூலப்பிர கிருதியென்று சொல்லப்பட்
டவிந்து தத்துவத்தி லொடுங்கும் அந்த விந்துவும் பி
ராந்தியாய்த் தோன்றியிருந்த பாம்புபோய்க் கயிறாய்கா
ணப்படுவது போலத் தனக்கு அதிஷ்டானசைதன்னி
யமான பிரம சைதன்னியமாத்திரமாகவேகாணப்படும்
படி அதிலேயொடுங்கியிருக்கும் இப்படிபொய்யாகத்தோன்
றப்பட்ட வைகளையெல்லா மெய்ப்பொரு ளென்றுய்க்
கண்டு அதுவே நிசமாக விருக்கின்ற தன்வடிவ மாகத்
தெளிந்து கவலை கெட்டிருக் கின்றவனே சீவன் முத்த
ன இவையேதத்துகளி ஞொடுக்கமாம்

இப்படித் தோற்றி யொடுங்கின தத்துவம்-௩௬ ஆ
ம் அவையாவன - பூதம்-௫- ஸ்தூல சரிரதத்துவம்-௬-
சூட்சமசரிர தத்துவம்-௨௰- காரண சரிரமான- அவித்
தைவித்தை-௨ இவற்றிற் பிரதி பிம்பித்தசீவன் ஈஸ்வ
ரன்-௨- இவற்றிற் கெல்லாம் அதிஷ்டானமாக விருக்கி
ன்ற பிரமம்-௧- ஆக-௩௬-ஆம்-இவற்றிலே சீவருக்குச் ச
முதாயபூதம் - ௫- மாயை-௧- மாயாபிரதி பிம்பனான ஈ
ஸ்வரன்-௧- பிரமம்-௧- ஆகிய வெட்டினையும் சீவர்கள் ஞ

முதாயமாக அநுப விப்பார்கள் மற்றவிருபத்தெட்டி
னையுந் தனித்தனியாக அநுபவிப்பார்கள் எங்ஙன மெ
னின் பிருதிவி நசித்தின் சகலபிராணிகளுக்கும் ஆகார
மில்லையாம் அப்புவில்லாவிடி னெல்லாருக்குங் குளிர்
ஆ பதஞ் செய்த மில்லையாம் தேயுவில்லா விடின் பாக
மில்லையாம் வாயுவில்லா- விடின் எல்லாருக்கும்- புடை
பெயர்ச்சி யில்லையாம் ஆகாசமிறக்கி னொருவருக்கும் அ
வகாச மில்லையாம் மாயையும் மாயாப்பிரதி பிம்பனு மி
ல்லாவிடின் சகல சமயங் களுக்குந் தெய்வ மில்லையாம்
பிரமமில்லை யாயின்- ஒருவருக்கும் அறிவில்லையாம் ஆ
கையால் இந்த வெட்டும் எல்லாருக்குஞ் சமுதாயங்
களாம் மற்றவை தனித்தனி யநுபவிக்கப் படுவதெங்
ஙனமெனின் ஒருவனுக்கு ஸ்தூலசரீர மிறக்கின்- எல்
லாருக்கும் ஸ்தூலசரீரமிறவாமையினாலுஞ் சூட்சும சரீ
ரத்தினாலுஞ் சூட்சும- சரீரத்திலொரு வனுக்கு- அங்க
வைகல்லியம உண்டானா லெல்லாருக்கும் அங்கவைகல்
லியம் உண்டானா லெல்லாருக்கும் அங்கவை கல்லியம்
உண்டான காட்டினாலும் முத்தரா யிருக்கின்ற சுகர்வா
மதேவர் முதலானவர் களுக்கு அவித்தையுஞ் சீவ
னு நசித்திருக்க மற்றவர் களுக்கு அவித்தையுஞ் சீவ
னு நசியாமையாலும் இந்த விருபத் தெட்டு தத்துவங்

களைச் சீவர்கள் தனித்தனியே அனுபவிப்பார்க ளென்பதற்குச் சந்தேமில்லை

இந்தத்தத்துவம் முப்பத்தாறில் எப்பொழுதுந் தானாகவே விளங்குவது-க- எப்பொழுந்துந் தனக்கன்னியமாகக் காணப்படுகின்ற வைகள்-எ- தானாகவும் - தனக்கன்னிய மாகவும் அனுபவிக்கப் படுகின் றவைகள் உஅ. எங்ஙனமெனின் அவஸ்தாத்திரய சாட்சியாயிருக் கின்ற பிரமசை தன்னியம எல்லா அவஸ்தையிலுந்தானாக விளங்கு கையினாலுமற்றத்தத்துவங்கள்போலத் தனக்கன்னியமாகக் காணப்படாமையினாலும் அப்பிரமசைதன்னிய மொன்றுமே தானாக- விளங்குவது- மாயாப்பிரதிபிம்பன் யீஸ்வரன் மானயபஞ்சபூதங்கள் ஆகிய வேறுதொழிலாகிய பஞ்சகிருத்தியந்த சர்வதார முதலானவைகள் ஒருக்காலுந் தன் து தொழிலாகக்காணப் படாமையினாலே இவ்வேழு தத துவங்களுந் தனக்கன்னியமாகக்காணப் படுகின் றனவாம்- மற்றவிருபத் தெட்டினுள் ஸ்தூலசரீரதத்துவம் ஆறும் நான்பிராமணன்நான்க்ஷத்திரியன் நான்வைசியன் நான்சூத்திரன்நான்பிரமசாரி நான்கிரகஸ்தன் நான்வானப் பிரஸதன் நான்சன்னியாசி நானாண்மகன் நான்பெண்மகள் நான்கரியன் நான்சிகப்பன் நானெடியன் நான்குறியன்நான்பரு

த்தன் நானிளைத்தேனென்று தானாகவும, என் மாடு என்கன்று என்பதுபோல் என்சரிரம்பருத்தது என்சரிரமிளைத்தது என்மயிர்நரைத்தது என்சரிரந்தோன்றி இத்தனைநாளாயிற்று என்றுதனக்கன்னியமாகவும் வழங்கப்படுகின்றமையாலும் சூட்சம சரிரதத்துவங்களிருபதும்நான்கண்டேன்கேட்டேனதொட்டேன்புசித்தேன கொடுத்தேன வாங்கினேன் நடந்தேன்போகித்தேன் சிந்தித்தேன் நிச்சயித்தேன் இந்தப்பஞ்சசத்திற்குச் சீவித்தேனென்றுதானாகவும் - என்வீடு என்னுடைமை என்பதுபோல் என்கண் என்காதுஎன்மூக்குஎன்னாக்கு என்கை என்கால் என்மனம்என்புத்தி என்னகங்காரம் என்சித்தம் என்பிராணனென்று தனக்கன்னியமாகவும் வழங்கப்படுகின்றமையாலுங் - காரணசரிரதத்துவ மாகிய அஞ்ஞானமுஞ் சிதாபாசனும் நானறியேன் நானறிவேனென்று தானாகவும் என்னஞ்ஞானம் என்சீவனென்று தனக்கு அன்னியமாகவும் வழங்கப்படுகின்றமையாலும் இந்தவிருபத்தெட்டு தத்துவங்களுந்தானாகவுந் தனக்கன்னிய மாகவும் அனுபவிக்கப்படுகின்றவைகளாம்

இப்படிச்சொல்லிய குருவைப்பார்த்துச் சீஷன் இ
த விருபத்தெட்டுத் தத்துவங்களுந்தானாக விருந்தா

சாட்சியைப்போல ஒருதன்மையாகத் தோற்றவேண்டு மேயல்லாமல் ஈஸ்வரன்மாயைபஞ்சபூதம் என்பவைகளைப்போலத் தனக்கன்னியமாக வழங்கப்படவேண்டுவதில்லையே அல்லது இந்தவிருபத்தெட்டுந்தனக்கன்னியமாகவிருந்தா லெப்போதும் அன்னியமாகவே வழங்கப்பட வேண்டுமே யல்லாமல தானாக வழங்கப் படவேண்டுவ தில்லையே இவைகள் இப்படித் தானாகவுந் தனக் கன்னியமாகவும் வழங்கப்படு மென்பது இருட்டாதித்தனென்பதுபோலவிருத்தமாகவிருக்கின் றதோ என்று கேட்குஞ் சங்கைக்குத் தாம் பரமார்த்திகமாகத் தானென்பது ஒருவகை அத்தியாசமாகத் தானென் பது ஒருவகை இப்படி இருவகையுண்டு சாட்சி சைதன்னியத்தைத் தானென்பது பாரமார்த்திகமே யல்லாமல் உபசார மென்று தனக் கன்னியமாக விருக்கின்ற இந்த விருபத் தெட்டையுந் தானெனல் குற்றியைமக னென்றுங்- கயிற்றை யரவென்று மதிதல்போலமயக்கமேயன்றி யுண்மையன்றி ஆகையா அஞ்ஞான காலத்துந் தானல்லவென்று அறியப்பட்ட தத்துவம்-௭-ம்- இப்படிப் பட்ட விவேக மடைந்த பின்பு தானல்ல வென்று அறியப் பட்ட தத்துவம-௨௮-ம்- ஆகிய முப்பத்தைந்து தத்துவங் களையும் அவற்றி

ன் குணக்குறிகளுடனே அறிகின்ற அறிவே கடத்தை
ப் பார்க்கின்றவன் அதற்கு அன்னியமாகவே யிருந்து
அதைப் பார்க்கின்றதுபோல அவற்றிற்கு அன்னியமா
கவிருந்து அவற்றை யறிகின்றதென்றும் அதுவேமு
ப்பத்தாறுந் தததுவமாகிய தானென்றும் அதுவேசிவ
மென்றுஞ் சலக்கமறத் தெளிந்தவனே சீவன்முத்தனி
ப்படிப் பிரமமே தானென்றும இந்த முப்பத் தைந்து
தத்துவமுந் தனக்கன்னிய மென்றும் பகுத்தறியாதஅ
விவேகி அகங்காரக் கிரந்தியினாலே புத்திரகளத்திராதி
களுக் குண்டான துக்கத்தைத் தன்னுடைய துக்கமாக
க் கொள்ளுகின்றதுபோல்இந்த விருபத்தெட்டுத் தத்
துவங்களி னுடைய தொழிலை யுந்தனது தொழிலென்
று மயங்கிக் கொள்ளுகின்ற மையினால் இந்த இருபத்
தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்டபுண்ணியபாபங்களினா
ற் கட்டுண்டு அந்தக் கர்மத்தினாலே சனனமரணசம்
சாரத்திலே அகப் பட்டு மயங்குவன்- பிரமசைதன்னி
யமே தானென்றும் இந்த ௩௫- தத்துவங்களுந் தான
ல்லவென்றுந் தெளிந்த விவேகி அகங்காரக் கிரந்தி ய
ற்றவனாயும்இந்த விருபத்தெட்டினுடைய தொழில் க
ளுந் தன்னுடைய தொழில்களல்லவென்றும் இந்தவி

ரூபத் தெட்டாலும் புசிக்கப் பட்டவைகள் தன்னாலே புசிக்கப் பட்டவைக ளல்லவென்றும் நிச்சயமாகத் தெளிந்து மயக்க மற்றவனாயும் இந்த விரூபத் தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினின்று நீங்கிக் காமபந்த மற்றவனாயு மிருக்கிற படியினாலே சனனமரணாதி சம்சார மில்லாமல் முத்தனாகிப்பிரமமாதிரமாகவே யிருப்பன்-இவனைச் சீவன் முத்த னென்றுந் திடப்பிரஞ்ஞ னென்றும் அதிவர்ணாச்சிரமி யென்றுங் குணாதீத னென்றும் பிராமண னென்றும் ஆறுசாஸ்திரங்களுஞ் சொல்லுகின்றன- சகலரு மிந்தத் தத்துவங்களை விசாரணைசெய்து மோட்சமடையக்கடவார்கள்

ஞானசிவவாதக் கட்டளை,

முற்றும்